**செய்தி வெளியீடு எண் : 1474** **நாள் : 26.08.2022**

# செய்தி வெளியீடு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
## தனித்தேர்வர்களுக்கான முதனிலைத் தேர்வு

2023ம் ஆண்டு ஜூலை மாதத்தில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் (NCVT) நடத்தப்படும் அகில இந்திய தொழிற்தேர்வில் தனித் தேர்வர்களாக (Private Candidates) கலந்து கொள்ள கீழ்க்காணும் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**முதல் வகை (category I): தேசிய தொழிற்சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்**

ஏற்கனவே ஏதேனும் ஒரு தொழிற்பிரிவில் ITI–ல் பயின்று தேர்ச்சி பெற்ற முன்னாள் பயிற்சியாளர் Allied தொழிற்பிரிவில் 1 வருட பணி அனுபவம் பெற்றிருந்தால் அப்பிரிவில் தேசிய தொழிற்சான்றிதழ் பெறும் பொருட்டு தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம்.

**இரண்டாம் வகை (category I I): திறன்மிகு தேசிய தொழிற்சான்றிதழ் பெற்ற விண்ணப்பதாரர்**

திறன்மிகு பயிற்சி தேசிய தொழிற்சான்றிதழ் பெற்ற (COE NTC) பயிற்சியாளர்கள் தாங்கள் பயின்ற செக்டாருடன் தொடர்புடைய தொழிற்பிரிவில் ஒரு வருட பணி அனுபவம் பெற்றிருந்தால் அப்பிரிவில் தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம்.

**மூன்றாம் வகை (category III): ஆகஸ்ட் 2018– வரை SCVT சேர்க்கை பெற்றவர்**

ஆகஸ்ட் 2018 வரை சேர்க்கை செய்யப்பட்ட மாநில தொழிற்பயிற்சி குழுமம் (SCVT) தொழிற்பிரிவு பயிற்சியாளர்கள் தனித்தேர்வராக விண்ணப்பிக்கலாம்.

**நான்காம் வகை (Category IV): :பிற விண்ணப்பதாரர்கள்**

a) விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் அவர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.

b) தொழிற் பழகுநர் சட்டத்தை செயல்படுத்தும் நிறுவனங்கள் தொழிற் சாலை சட்டம் 1948–ன் கீழ் செயல்பட்டு வரும் நிறுவனங்கள் மற்றும் அரசு / உள்ளாட்சி மன்றத்தில் பதிவு பெற்ற நிறுவனங்கள் ஏதேனும் ஒன்றில் விண்ணப்பிக்கும் தொழிற் பிரிவு தொடர்பான பணியில் மூன்று வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

c) ஆகஸ்ட் 2019–ஆம் ஆண்டு முதல் SCVT திட்டத்தின் கீழ் சேர்க்கை செய்யப் பெற்ற பயிற்சியாளர்கள் இந்த Category IV–இன் படி தனித்தேர்வராக விண்ணப்பித்து NTC பெறலாம்.

தனித்தேர்வராக தேர்வெழுத விரும்பும் விண்ணப்பதாரர் அத்தொழிற்பிரிவிற்குரிய குறைந்தபட்ச கல்வித்தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

தகுதியுள்ள I, III & IV வகையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு (இரண்டாம் வகையைத் தவிர) முதனிலைத் தேர்வுகள் கருத்தியல் (Theory) பாடத்தில் 11.10.2022 மற்றும் செய்முறை (Practical) தேர்வு 12.10.2022 ஆகிய தேதிகளில் கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இத்துறையால் நடத்தப்படும். கருத்தியல் தேர்வு descriptive type–ல் இடம்பெறும். கருத்தியல் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் மட்டுமே செய்முறை தேர்வில் கலந்து கொள்ள இயலும். இதில் தேர்ச்சி பெறுபவர்கள் மற்றும் இரண்டாம் வகை விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஜூலை 2023–இல் நடைபெறவுள்ள அகில இந்திய தொழிற் தேர்வில் தனித்தேர்வராக (Private Candidates) கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். தொழிற் பிரிவிற்கு ஏற்ப அனைத்து தேர்வுகளிலும் வெற்றி பெறுபவர்களுக்கு NCVT, புது டெல்லி மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் (National Trade Certificate) வழங்கப்படும்.

தனித்தேர்வராக விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள், விண்ணப்ப படிவம், முழு விவரங்கள் அடங்கிய விளக்க குறிப்பேடு (Prospectus), ஆகியவற்றை www.skilltraining.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அதற்கான தேர்வு கட்டணத்தை (ரூ.200/– ரூபாய் இருநூறு மட்டும்) www.karuvoolam.tn.gov.in என்ற என்ற இணைய தளத்தின் வழியாகவோ அல்லது தமிழக அரசின் கருவூலம்/ பாரத ஸ்டேட் வங்கியின் கருவூலக் கிளை வழியாகவோ e–Challan மூலம் செலுத்த வேண்டும்

விண்ணப்பத்துடன் இணைய வழியாக தேர்வு கட்டணம் ரூ200/– செலுத்தியமைக்கான செலுத்துச் சீட்டு (e–Challan), கல்விச்சான்றிதழ் நகல் மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றினை இணைத்து பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 12.092022–க்குள் கீழ்க்கண்ட அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

| வ.எண் | அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் | வ.எண் | அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் | வ.எண் | அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1 | வடசென்னை | 13 | பரமக்குடி | 25 | நாகப்பட்டினம் |
| 2 | செங்கற்பட்டு | 14 | சிவகங்கை | 26 | புதுக்கோட்டை |
| 3 | அம்பத்தூர் | 15 | தேனி | 27 | தஞ்சாவூர் |
| 4 | வேலூர் | 16 | தருமபுரி | 28 | நீடாமங்கலம் |
| 5 | அரக்கோணம் | 17 | ஓசூர் | 29 | திருச்சி |
| 6 | கோவை | 18 | நாமக்கல் | 30 | அரியலூர் |
| 7 | ஈரோடு | 19 | சேலம் | 31 | கடலூர் |
| 8 | கரூர் | 20 | நாகர்கோவில் | 32 | பெரம்பலூர் |
| 9 | குன்னூர் | 21 | தென்காசி | 33 | திருவண்ணாமலை |
| 10 | திருப்பூர் | 22 | திருநெல்வேலி | 34 | உளுந்தூர்பேட்டை |
| 11 | திண்டுக்கல் | 23 | தூத்துக்குடி | 35 | திண்டிவனம் |
| 12 | மதுரை | 24 | விருதுநகர் | | |

கடைசி தேதிக்குப்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in